*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p216-230** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# செம்மொழியில் தமிழ்ச்சித்தரியலும் இயற்கைக் கோட்பாடுகளும்: ஓர் விரிவான அறிவியல் மற்றும் மெய்யியல் வரலாற்று ஆய்வு

## Tamil Siddha Science and Natural Principles in Classical Literature: A Comprehensive Scientific and Philosophical Historical Study

**முனைவர். மு. சௌந்தரராஜ்,**
முனைவர்பட்ட மேலாய்வாளர் (ICSSR - இந்திய சமூகஅறிவியல் ஆராய்ச்சிக்கழகம்), தமிழ்த்துறை,
கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 641029, மின்னஞ்சல்: dr.msrcbe@gmail.com
**Dr. M. Soundarraj*,**
*Tamil Ethnomedicine Researcher (ICSSR PDF), Department of Tamil, Kongunadu Arts and Science college (Autonomous), Coimbatore- 641029*
*ORCiD: https://orcid.org/0009-0009-0947-3035*
*Email: msoundarraj@kongunaducollege.ac.in, dr.msrcbe@gmail.com.*

*Article history*
Received: 31-07-2026
Revised: 31-07-2026
Accepted: 01-07-2026
**Published: 08-08-2026**

*Corresponding Author Email: *dr.msrcbe@gmail.com*

**Abstract:** Classical Tamil literature and Siddha texts serve as repositories of knowledge, seamlessly integrating nature, human physiology, traditional medicine, and philosophical thought. This research paper aims to examine in detail the natural lifestyle principles and Siddha philosophies reflected in Tolkappiyam, Ettuthokai, Pattupattu, Pathinenkilkanakku ethical works, Thirumandhiram, and the writings of revered Siddhars. This paper establishes the scientific framework through which ancient Tamils, regarding nature as an integral foundation of life, maintained bodily equilibrium based on the Five Elements theory (Pancha Bhuta) and the Three Doshas theory (Vata, Pitta, Kapha). The ancient medical knowledge of the Tamils is demonstrated by battlefield surgical care, cotton wound dressings, the use of suture needles during the Sangam era, and the prescribed dietary regimens in Natrinai. Furthermore, the diagnostic methods highlighted by Thiruvalluvar, the Yoga-Kayakalpa concepts of Thirumoolar, and the alchemical, herbal, and subtle scientific techniques of Siddhars—including Agathiyar, Bogar, Yugi Muni, and Gorakkar—are detailed extensively. Drawing upon the perspectives of Western scholars such as Sir John Evans and Scott Elliot, the antiquity of human origins in the South Indian region is also examined. Ultimately, Classical Tamil literature and Siddha medicine serve as timeless foundational resources offering guidance for modern global pursuits in environmental protection, sustainable development, and holistic health..

**Keywords:** *Classical Tamil, Tamil Siddha Tradition, Five Elements Theory, Three Doshas Theory, Natural Living, Thirumandhiram, Sangam Medicine, Kayakalpa.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**சுருக்கம்**

தமிழ் செம்மொழி இலக்கியங்களும் சித்தர் வாங்மயங்களும் இயற்கை, மனித உடலியல், மரபு மருத்துவம் மற்றும் மெய்யியல் சிந்தனைகளை ஒருங்கே ஒருங்கிணைத்த அறிவுக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. இவ்வாய்வுக் கட்டுரை, தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு அற இலக்கியங்கள், திருமந்திரம் மற்றும் சித்தர் பெருமக்களின் நூல்களில் வெளிப்படும் இயற்கை வாழ்வியல் கோட்பாடுகளையும் சித்தரியல் தத்துவங்களையும் விரிவாக ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்டைய தமிழர்கள் இயற்கையைத் தன் வாழ்வின் பிரிக்க முடியாத அடிப்படையாகக் கொண்டு, ஐம்பூதக் கோட்பாடு மற்றும் முக்குற்றக் கோட்பாடு (வாதம், பித்தம், கபம்) ஆகியவற்றின் அடிப்படையில் உடலின் சமநிலையைப் பேணிய அறிவியல் முறையினை இக்கட்டுரை நிறுவுகிறது. சங்க காலத்தில் போர்க்களத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண சிகிச்சை, பஞ்சு வைத்துக் கட்டுதல், தையல் ஊசி பயன்பாடு, நற்றிணை குறிப்பிடும் பத்திய உணவு விதிகள் ஆகியவை தமிழரின் தொன்மையான மருத்துவ அறிவை வெளிப்படுத்துகின்றன. மேலும், திருவள்ளுவர் சுட்டும் நோய்நாடல் முறைகளும், திருமூலரின் யோக-காயகற்பச் சிந்தனைகளும், அகத்தியர், போகர், யூகிகமுனி, கோரக்கர் உள்ளிட்ட சித்தர்களின் இரசவாதம், மூலிகையியல் மற்றும் நுண் அறிவியல் நுட்பங்களும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. மேலைநாட்டு அறிஞர்களான சர் ஜான் எட்வன்ஸ் மற்றும் ஸ்காட் எலியட் ஆகியோரின் கருத்துகளின் வழியே தென்னிந்திய நிலப்பரப்பின் மானுட தோற்றத் தொன்மையும் இங்கு நிறுவப்படுகிறது. நவீன கால சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலையான வளர்ச்சி மற்றும் முழுமையான ஆரோக்கியம் தொடர்பான உலகளாவிய தேடல்களுக்குச் செம்மொழித் தமிழ் இலக்கியங்களும் சித்த மருத்துவமும் வழிகாட்டும் காலபேதமற்ற மூல ஆதாரங்களாக விளங்குகின்றன.

**குறிச்சொற்கள்**

செம்மொழித் தமிழ், தமிழ்ச்சித்தரியல், ஐம்பூதக் கொள்கை, முக்குற்ற இயல், இயற்கை வாழ்வியல், திருமந்திரம், சங்க மருத்துவம், காயகற்பம்.

## 1. முன்னுரை

தமிழ் மொழியும் பண்பாடும் காலத்தால் மூத்த பழமையையும் வரலாற்றுச் சிறப்பையும் கொண்டவை ஆகும். மரபினைக் கட்டமைத்தவர்கள் இம்மண்ணின் மைந்தர்களாவர். கலைகள் சிறந்த ஆச்சார நெறிகளாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கலாச்சார வளர்ச்சி ஏற்பட்டு அனைவராலும் பின்பற்றப்படும் விதத்தில் விளங்குகின்றன. ஒவ்வொரு தனிமனித நாகரிக வளர்ச்சியும் அவ்வினக்குழு தோன்றிய மரபிலிருந்தே தொடங்குகிறது. தமிழ்மொழி

உலகமொழிகளின் வரிசையில் மிகப்பழமையான உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்கிறது. தமிழ்மொழி தோற்றம் பெற்ற காலத்தில் இருந்த மனிதச்சமூகம் பழங்குடிகளாக இனக்குழு முறையில் காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்து இயற்கையினையும் ஐம்பூதங்களையும் நன்கு அறிந்து கொண்டவர்களாக இருந்திருக்கின்றனர்.

சைகை மொழி, குறியீட்டு மொழி, வரிவடிவ மொழி, எழுத்துவடிவ மொழி என மொழி வளர்ச்சி பெற்ற பின்பு செவ்வியல் தன்மையுடைய சங்கப் பனுவல்கள் ஆக்கம் பெறத் தொடங்கின. சங்க இலக்கியங்களில் இயற்கையுடன் பழந்தமிழர்கள் இரண்டறக் கலந்து வாழ்ந்த முறைகளைப் பாடல்கள் வழி அறியமுடிகிறது. சங்கப் பாடல்களைத் தொடர்ந்து உற்றுநோக்கும் போது இயற்கை வாழ்வியல் கோட்பாடு முறை (Theory of Natural Biology) மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது. இயற்கையுடன் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளையும் நெறிகளையும் பின்பற்றி வாழ்வதையே சங்ககால மக்கள் கோட்பாடாகக் கருதியிருக்கின்றனர். இயற்கைவாதம் (Jusnaturale), இயற்கைவிதிக் கோட்பாடு (Theory of Naturalism) என்ற கட்டமைப்புகளில் இயற்கை வழிபாடு, ஐம்பூதக் கொள்கை, ஐந்தெய்வ வழிபாட்டு முறைகள் நிலத்தின் அடிப்படையில் பிரித்துக் காட்டப்படுகின்றன.

இயற்கையான நியதிகளை அடைவெளி வானியல் செய்திகள், நல்லவை செய்தால் நன்மையும் அல்லவை செய்தால் துன்பமும் விளையும் என்பதையும் விளக்குவதாக உள்ளன. மரங்கள், செடிகள், கொடிகள் போன்ற இயற்கைத் தாவரங்களும், விலங்கினங்களும் சுட்டப்பட்டு இயற்கைச் சமநிலை பதிவு செய்யப்பட்டுள்ளது. மருந்து, மருத்துவர், மருத்துவச்சி போன்ற சொற்களையும் சங்க நூல்களில் காணமுடிகிறது. களப்பிரர்கள் காலத்தில் தோன்றிய அற இலக்கியங்கள் மருத்துவப் பெயர்களிலேயே திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் எனப் பெயரிடப்பட்டுள்ளமை பழந்தமிழர்கள் மரபு மருத்துவத்தில் அறிவார்ந்தவர்களாக இருந்தனர் என்பதை உறுதி செய்கிறது.

தமிழகத்தின் ஞானக் கருவூலங்களாக விளங்கியவர்கள் தமிழ்ச்சித்தர்கள் ஆவர். அவர்களின் சித்த மரபு மருத்துவமானது தமிழர்களின் முதன்மை மரபு மருத்துவ முறையாக உள்ளது. தத்துவ மரபு அடிப்படையில் உடலினை தொண்ணூற்றி ஆறு தத்துவங்களாகப் பகுத்துக் கூறி, ஐம்பூதங்களை மூவகை நாடிகளாக மனித உடலில் கண்டு தெளிந்து, நோய்களைக் கவனித்து, இயற்கை மூலிகைப் பொருட்களைக் கொண்டு மருந்துகள் செய்து கொடுத்து மனித குலத்தின் பிணிகளைப் போக்கியுள்ளனர். இத்தகு மருத்துவ நூல்கள் சித்தர் இலக்கியங்கள் என்றழைக்கப்படுகின்றன. அவற்றில் தமிழ் தத்துவார்த்த ரீதியில் சித்தரியல் கோட்பாட்டு அணுகுமுறைகள் இலக்கியங்களாகப் பயன்படுகின்றன. இந்நூல்களில்

https://doi.org/10.63300/kijts06022026.22

மருத்துவம், மந்திரம், ஜோதிடம், யோகம், ஞானம், இரசவாதம், மெய்யியல், பெண்ணியம் போன்ற கலைகள் பாடுபொருளாக உள்ளன· அகத்தியர் தமிழ்ச் சித்தர்களில் முதன்மையானவராகக் கருதப்படுகிறார்· அவர்தம் நூல்களும் சித்தர் இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பனவாக உள்ளன·

## 2. தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களில் இயற்கை வாழ்வியலும் மருத்துவ அறிவியலும்

தமிழகத்தில் சித்தர்கள் காயசித்தி தேசமுடையவர்களாக பல்லாயிரம் ஆண்டுகள் இறவாநெறியில் வாழ்ந்து வந்ததாக அவர்தம் பாடல்கள் வழி அறியமுடிகிறது· சித்தர் இலக்கிய நூல்கள் ஓலைச்சுவடிகளில் பெரும்பாலும் எழுதப்பட்டவையாக உள்ளன· அச்சுப்பதிப்பில் புத்தகங்களாகப் பதினெட்டாம் நூற்றாண்டு முதல் வெளிவரத் தொடங்கின· இன்னும் அநேகமான சித்தர் இலக்கிய சுவடிகள் அச்சேறாமல் இருக்கின்றன· மீ.ப. சோமசுந்தரம் சித்தர் இலக்கியங்களின் புதுமையையும் பழமையையும் பின்வருமாறு விளக்குகிறார்:

"சித்தர் பாடல்களை வாசிக்கும்போது, அவற்றின் எளிமையும் கம்பீரமும் மாறாத இளமைப் பொலிவோடு மிளிர்வதைக் காணலாம். இப்பாடல்கள் தோன்றிய காலத்தைத் துல்லியமாகக் கணித்துக் கூறுவது இயலாத ஒன்று. காலத்தால் மிகவும் பழமையான சித்தர் இலக்கியம், தன் அமைப்பிலும் பொருட்சிறப்பிலும் என்றுமே புதுமையாகவும் இளமையாகவும் திகழ்கிறது. இத்தகையத் தொன்மையும் புதுமையும் ஒருங்கே அமைந்திருப்பதே சித்தர் இலக்கியத்தின் தலையாயத் தனிச்சிறப்பாகும்."[1]

சித்தர் இலக்கியக் காலவரையறையை அறுதியிட்டுக் கூற இயலாது· சங்ககால இலக்கியங்கள் தோற்றம் பெற்றபொழுது சித்தர் நூல்கள் தனியாகச் சித்தர்களின் பெயர்களில் எழுதப்பெறவில்லை· ஆனாலும் தொல்காப்பியத்திற்கு முந்திய தமிழ் இலக்கண நூலாக அகத்தியம் என்ற நூல் இருந்ததைத் தமிழ் இலக்கிய வரலாறு பதிவு செய்துள்ளது· பாக்யமேரி குறிப்பிடுவது போல, அகத்தியம் பன்னிரண்டாயிரம் நூற்பாக்களைக் கொண்டு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அரசியல், அமைச்சியல், பார்ப்பனவியல், சோதிடவியல் முதலான இயல்களைக் கொண்டிருந்தது· அகத்தியர் தமிழ்ச் சித்தர்களில் தலைமையானவராக இருந்ததாகச் சித்தர் குரு மரபு கூறுகிறது· முச்சங்க காலத்தில் முதற்சங்க காலத்து நூல்கள் பல இயற்கைச் சீற்றங்களினாலும் கடல்கோளினாலும் அழிந்துபோனதாக வரலாற்றின் வழி அறியமுடிகிறது· அவ்வகையில் சித்தர்களின் பெயர்கள் அழிந்திருக்கக்கூடும் என்ற கருத்தெண்ணம் தோன்றுகிறது·

அதேசமயம், சங்க இலக்கிய நூல்களில் மருத்துவம் தொடர்பான செய்திகள் செறிவாகக் காணக் கிடைக்கின்றன· புறநானூற்றுப் பாடல்கள் மிகுதியாகப் போர்கள் நடந்ததாகப் பகர்கின்றன· அதில் விழுப்புண் படுதல் வீரர்களுக்கு வீரம் என்ற கருத்தினைக் கூறுகிறது· புண்பட்ட வீரர்களுக்கு மருந்து வைத்துப் புண்ணினை புறையேறாமல் ஆறவைக்க இரண சிகிச்சை செய்திருக்க வேண்டும் என்பதை காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணர் என்னும் புலவர் பாடிய புறநானூற்று வரியால் அறியமுடிகிறது[1]:

"கறுவாய் போகிய துதிவாய் எஃகாமாடு

பஞ்சியும் களையாப் புண்ணர்"

புண்பட்ட இடத்தில் பஞ்சு வைத்துக் கட்டும் வழக்கத்தினை இப்பாடல் தெளிவுறுத்துகிறது· வெறும் பஞ்சு மட்டும் புண்ணினை ஆறச் செய்யாது என்பதால், அதனுடன் மருந்தும் சேர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்· அம்மருந்து சித்தர்கள் கண்ட தமிழ் மரபு மருந்தாகவே இருந்திருக்கும்· பதிற்றுப்பத்துப் பாடலில் போர்க்களத்தில் காயமடைந்த வீரர்களின் மார்புப் புண்களைத் தைக்கும் போது, குருதியில் மூழ்கி மேலெழும் ஊசியானது நீருக்குள் பாய்ந்து எழும் சிரற்பறவையின் அலகைப் போல் இருந்ததாகக் கூறப்படும் 'நெடுவெள்ளூசி' பற்றிய குறிப்பு, பண்டைய தமிழரின் உயர்நிலை அறுவை மருத்துவத் தொழில்நுட்பத்தை மெய்ப்பிக்கிறது[4].

நற்றிணை நூலானது மருத்துவரை 'அறவோன்' என்று போற்றுகிறது· நற்றங்கொற்றனார் எனும் புலவர் பாடிய பாடலில் இக்கருத்து வெளிப்படுகிறது[1]:

"தருந்துகோல் எவ்வளை வேண்டியான் அழவும்
அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடா அது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்"[1]

நோயால் துன்பப்படும் பிணியாளர் அவர் வாய்க்குப் பிடித்த உணவை உண்ண அழுது கேட்டாலும் அதைக் கொடுக்காது, கொடிய நோய்க்கான மருந்திற்கான ஒவ்வாத உணவுகளை நீக்கி, உண்ணுமாறு உணவு கொடுத்தார் மருத்துவர் என்று இப்பாடல் விவரிக்கிறது· 'மருந்தாய்ந்து' என்னும் சொல் தமிழ் மரபு மருத்துவ முறையில் நோய்க்குரிய உணவுக் கட்டுப்பாடுகளையும், பத்திய விதிகளையும் துல்லியமாகக் கடைப்பிடித்ததை உறுதி செய்கிறது·

நற்றிணை 142-ஆம் பாடல் இடைக்காடனார் என்ற புலவரால் பாடப்பெற்றிருக்கிறது· பதினெண் சித்தர்களின் வரிசையில் இடைக்காடர் என்ற சித்தர் இருப்பது, சான்றோர்

பெயர்களை அன்றைய மக்கள் பெயர்களாகப் பயன்படுத்தியமையையும், சித்தர்களின் கொள்கைகள் சங்க இலக்கியக் காலத்திலேயே சமூகத்தில் பரவியிருந்ததையும் புலப்படுத்துகிறது· சங்க காலம் கி.மு. 300 முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையிலானது என்று அகழ்வாய்வுத் தரவுகளின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது· எங்ஙனமாயினும், சங்ககாலத்திலேயே தமிழர் சித்தரியல் மருத்துவ முறையும் இயற்கை வாழ்வியல் நெறிக்கோட்பாடும் தமிழர் வாழ்வியலோடு பிணைந்திருந்தன என்பது தெளிவாகிறது·

தொல்தமிழர் இலக்கணமான தொல்காப்பியத்தில் மரபு மருத்துவக் கூறுகளும் உயிரியல் (Biology) வகைப்பாடுகளும் நுட்பமாக விளக்கப்பட்டிருக்கின்றன· புலன் நுகர்வின் அடிப்படையில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிரினங்களைத் தொல்காப்பியர் பிரிக்கிறார்:

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனோடு நாவே
மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே
ஆறறி வதுவே அவற்றோடு மனனே"

இயற்கையில் ஐம்பூதங்களும் இயங்குகிறதாகவும் இயக்குவிக்கும் சக்தியாகவும் செயல்படுகின்றன என்பதை மனத்தினால் அறிந்து பழந்தமிழர்கள் செயல்பட்டுள்ளனர்· ஐவகை நிலப்பிரிவில் அந்தந்த நிலத்திற்குரிய முதல், கரு, உரிப்பொருள்களின் அடிப்படையில் திணைகளைக் கட்டமைத்தனர்· மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து தாங்கள் கண்ட அனுபவங்களை வருங்கால தலைமுறையினர் பின்பற்றும் பொருட்டு வழிபாட்டு முறைகளையும் ஐந்தெய்வ நெறிகளையும் உருவாக்கினர்· புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகனார், சேரன் சேரலாதனைப் பாடும்போது ஐம்பூதங்களின் பொறுமையையும் ஆற்றலையும் உவமிக்கிறார்:

"மண்மணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவருவளியும் வளிதலை யேநீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு ஐம்பெரும்
பூதத்திற்கை போல்"

ஐவகை பூதங்களும் இயற்கையாக நல்லோர் தீயோர் எனப் பாரபட்சம் இன்றிப் பொறுத்திருப்பது போல மன்னனும் பொறுமையுடன் செயல்பட வேண்டும் என்று பாடியுள்ளார்·

### 3. அற இலக்கியங்களும் தமிழ் மருத்துவ அறிவும்

சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து வந்த அற இலக்கியங்களில் சித்த மருத்துவப் பொருட்களின் பெயரிலேயே நூல்கள் ஆக்கம் பெற்றன· திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்றவை இதற்குச் சிறந்த சான்றுகளாகும்· இவற்றைச் சமண முனிவர்கள் மிகுதியாக எழுதினர்· எண்ணாயிரம் சமணர்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி தமிழகம் வந்து தமிழ் கற்றனர்· தமிழிலிருந்த சங்கப் பனுவல்கள் பெரிய வடிவிலான யாப்புக் கட்டமைப்பைக் கொண்டிருந்ததைக் கண்டு, வெண்பா யாப்பில் எளிய வடிவில் அறக் கருத்துகளைப் பாடினர்· சமணர்கள் எழுதிய சித்த மருத்துவ நூல்கள் 'வாகடம்' என்று பெயரிடப்பட்டு 'வயித்திய வாகடங்கள்' என்று அழைக்கப்பட்டன· தமிழ் சிந்தாமணி மருத்துவத்தில் 'முக்கடுகு' என்றே அழைக்கப்பட்ட மருந்து, வடமொழித் தொடர்பால் 'திரிகடுகம்' எனப் பெயர் பெற்றது·

உலகப்பொதுமறையாம் திருக்குறளில் திருவள்ளுவர் 'மருந்து' என்ற தனி அதிகாரம் அமைத்துள்ளார்· அதில்,

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

என்று குறிப்பிடுகிறார். தமிழ்மரபு மருத்துவ நோயறிதல் விதியின் முதற்படியான வளி (வாதம்), அழல் (பித்தம்), ஐயம் (கபம்) ஆகிய மூவகை நாடிகள் உடலில் குறைந்தாலும் மிகுதியானாலும் நோய் உண்டாகும் என்பதை இக்குறள் நிறுவுகிறது· மனிதன் இயற்கையான பஞ்சபூத இயக்கச் சக்தியின் அடிப்படையிலேயே வாழ முடிகிறது· வள்ளுவர் இங்கு 'நூலோர்' என்று சுட்டுவது, தனக்கு முன்னரே மருத்துவ நூல்களைப் படைத்த தமிழ்ச் சித்தர்களையே ஆகும்·

தத்துவ மரபான சைவசித்தாந்த நெறி மனிதன் இறைவனை அடைய பசு, பதி, பாசம் என்ற முப்பொருள் உண்மைய வழிகாட்டுகிறது· ஐம்பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் மனித உடலில் அமைந்துள்ளன· இவற்றை மூவகை நாடிகளாகக் கணிப்பர்: வாதம் (காற்று), பித்தம் (நெருப்பு), கபம் (நீர்)· ஆகாயம் மனமாகவும், நீரும் நிலமும் உடலாகவும் செயல்படுகின்றன· பஞ்சபூதக் கொள்கை சமண மெய்யியலிலும் முதன்மை பெற்றது· உண்மை விளக்கம் போன்ற சித்தாந்த நூல்கள் கணித வடிவங்களுடன் ஒத்திருக்கின்றன· 'நமசிவய' எனும் பஞ்சாக்சர எழுத்து வடிவம், பஞ்ச பட்சி சாத்திர நூலில் மனித உடலியல் இயங்கியலைக் குறிப்பதாக உள்ளது· மூவகை நாடிகள் மற்றும்

ஐம்பூதங்களின் சமநிலையைக் கொண்டு நோயறியும் சித்தரியல் அணுகுமுறை தமிழர்களின் பொதுவறிவாக விளங்கியது·

சமணக் கொள்கை மனித ஆன்மாவே கடவுள் என்கிறது· சைவக் கொள்கையோ "இல்லாதது தோன்றாது; தோன்றியது மறையாது" என்ற சத்காரிய வாதத்தின் அடிப்படையில் பதி, பசு, பாசம் எனப் பொருள்களை மூன்றாகக் காண்கிறது· இறைவன் வேறு, ஆன்மா வேறு; இறைவனே பதி எனும் சிவமாகும் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவமாகும்·

**4. தமிழ்ச்சித்தரியல் தத்துவங்களும் உடலியல் கட்டமைப்பும்**

தமிழ்ச்சித்தர்கள் காயசித்தி அடைந்து மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்த அறிஞர்களாவர்· திருமூலரின் திருமந்திரப் பாடல்கள் தமிழரின் யோக ஞானக் தத்துவங்களை மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன[1]:

"மனத்தில் இருந்த மதிவான் உருவி
இனத்தினை நீக்கி இரண்டற வீசி
நினைத்த இடத்தே நிலைபெறுமாகில்
அனைத்துயிர்கள் ளெல்லாம் அதி பதியாமே"

மனத்தினுள் இருக்கும் அறிவாகிய வாள் ஆயுதத்தை உருவியெடுத்து, மாயையாகிய முப்பத்தியாறு தத்துவங்களையும் கடந்து, ஆணவத்தைக் களைந்து, மனத்தை யோக நிலையில் நிலைநிறுத்தினால் மனிதனும் இறைத்தன்மையைப் பெற முடியும் என்ற யோக ஞானக் கருத்தை திருமூலர் அருளியுள்ளார்· மேலும் குருவருளின் சிறப்பைப் பற்றி,

"தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்
பின்னை வினையின் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவஅரு ளாலே"

என்று பாடுகிறார். முன்வினையால் துன்புறும் பிறவியில், குருவின் தீட்சையினாலும் அருளினாலும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் நசித்துப் போய்ச் சிவஅருள் கிட்டும் என்பது இதன் பொருளாகும்·

சித்தர்கள் வாலைக்குமரி எனும் பெண் தெய்வ வழிபாட்டிலும், வாசியோகத்தின் வழியாகச் சிவனிய நெறியிலும் ஈடுபாடு கொண்டிருந்தனர்· இவர்கள் சாதி மதங்களைக் கடந்து மெய்யியல் தத்துவ ஞானிகளாகத் திகழ்ந்தனர்· சித்தர்கள் பதினெண் சித்தர்கள், நவநாத சித்தர்கள், நவகோடி சித்தர்கள் எனப் பல்வேறு மரபுகளாகக் கருவழிப் பரம்பரையிலும் குருவழிப் பரம்பரையிலும் தொடர்கின்றனர்·

சித்த மருத்துவத்தில் மனித உடலானது அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் இடையிலான தொடர்பைக் கொண்டு 96 தத்துவங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது· உடலியல் சமநிலையைக் காக்கும் ஐம்பூதங்கள், மூவகை நாடிகள் மற்றும் ஆறு ஆதாரங்களின் தொடர்புகள் கீழே உள்ள அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளன.

| **பூதம் (Element)** | **மனித உடலில் இருப்பிடம் (Anatomical Site)** | **இயங்கும் நாடி (Biological Humor)** | **உணர்வுத் திறன் (Sensory Function)** | **தத்துவ எண்ணிக்கை (Tattvas)** |
|---|---|---|---|---|
| **நிலம் (Earth)** | எலும்பு, தசை, தோல், நரம்பு | கபம் (ஐயம்) | நுகர்ச்சி (மண உணர்வு) | 5 (பிருதிவி கூறுகள்) |
| **நீர் (Water)** | இரத்தம், உமிழ்நீர், மூளை, சிறுநீர் | கபம் (ஐயம்) | சுவை உணர்வு | 5 (அப்பு கூறுகள்) |
| **தீ (Fire)** | பசி, தாகம், தூக்கம், கண் பார்வை | பித்தம் (அழல்) | பார்வை உணர்வு | 5 (தேயு கூறுகள்) |
| **காற்று (Air)** | ஓடுதல், இருத்தல், கிடத்தல், அசைவு | வாதம் (வளி) | தொடு உணர்வு | 5 (வாயு கூறுகள்) |
| **ஆகாயம் (Ether)** | காமம், குரோதம், உட்சுவர் இடைவெளி | வாதம் / மனம் | கேட்டல் உணர்வு | 5 (ஆகாய கூறுகள்) |

**5. முதன்மைச் சித்தர்களின் மரபும் அறிவியல் பங்களிப்புகளும்**

தமிழ்ச்சித்தர்கள் ஒவ்வொருவரும் மருத்துவ அறிவியல், இரசவாதம், யோகம், வானியல் போன்ற பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கினர்· அகத்தியர் முதல் கோரக்கர் வரையிலான முதன்மைச் சித்தர்களின் காலமும் அவர்களின் சிறப்பம்சங்களும் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன.

| சித்தர் பெயர் (Siddhar Name) | தோராயக் காலம் (Probable Period) | முதன்மை ஆய்வுக் களம் (Core Field) | முக்கிய நூல்கள் / பங்களிப்புகள் (Major Contributions) |
|---|---|---|---|
| **அகத்தியர்** | கி.மு. 6 - 7 ஆம் நூற்றாண்டு | இலக்கணம், மருத்துவம், இரணம் | அகத்தியம், வைத்ய சிகாமணி, செந்தூரம்-300, மணி-400[1] |
| **திருமூலர்** | கி.பி. 5 - 8 ஆம் நூற்றாண்டு | யோகம், காயகற்பம், சைவ சித்தாந்தம் | திருமந்திரம் (3000 பாடல்கள்), தமிழ் மூவாயிரம்[2] |
| **போகர்** | கி.மு. 4 ஆம் நூற்றாண்டு | இரசவாதம், மருந்தாக்கியல், யோகம் | பழனி முருகன் நவபாசாணச் சிலை, போகர் 7000[2] |
| **கொங்கணர்** | கி.மு. 4 - 5 ஆம் நூற்றாண்டு | இரசவாதம், முப்பு, தத்துவம் | கொங்கணர் சரக்கு வைப்பு 100, கொங்கணர் 400[2] |
| **யுகிமுனி** | கி.பி. 14 - 15 ஆம் நூற்றாண்டு | நோய் வகைப்பாடு, நோயியல் | யுகி வைத்ய சிந்தாமணி (4448 நோய்கள் விளக்கம்)[2] |
| **கோரக்கர்** | கி.பி. 11 ஆம் நூற்றாண்டு | மூலிகையியல், கற்ப முறைகள் | கோரக்கர் பிரம்ம ஞானம், கஞ்சா மூலிகை மருத்துவம்[2] |
| **கருவூரார்** | கி.பி. 11 ஆம் நூற்றாண்டு | கட்டடக் கலை, வாதக் காவியம் | தஞ்சைப் பெரிய கோயில் கட்டுமானம், கருவூரார் வாதக்காவியம்[2] |

## 6. மானுடவியல் தொன்மையும் உலகளாவிய வரலாற்றுப் பார்வையும்

https://doi.org/10.63300/kijts06022026.22

பிரிட்டன் நாட்டு நிலவியல் அறிஞர் சர் ஜான் எட்வன்ஸ் (Sir John Evans), "மனிதன் தென்னிந்தியாவில் தான் தனது தோற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்றான்" என்று குறிப்பிடுகிறார்· தமிழகப் பகுதியில் பழங்கற்காலப் புழங்கு பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளமை இக்கருத்திற்குச் சான்றாக அமைகிறது·

ஸ்காட் எலியட் (Scott Elliot) தமது 'மறைந்த லெமூரியா' (Lost Lemuria) என்னும் நூலில், "மனிதனின் மிகமிகப் பழமையான நாகரிகம் தென்னிந்தியாவில்தான் இருந்தது; அதன் விரிவான நிலப்பகுதிகள்தான் கடலினுள் மூழ்கிய லெமூரியா" என விவரிக்கிறார்· தமிழகம் நாவலந்தீவு என்றும் லெமூரியாக் கண்டம் என்றும் அழைக்கப்பட்டு, பின்னர் கடல்கோள்களால் அழிவுற்ற வரலாற்றுச் செய்திகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன·

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பழந்தமிழர்கள் தொல்குடிகளாகக் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்தபொழுது மூலிகைகளின் பயன்பாடுகளை அறிந்திருந்தனர்· விலங்கினங்களைப் பழக்கிப் பயிர் உற்பத்தி செய்து நாகரிக வளர்ச்சியடைந்தனர்· மொழியும் அனுபவக் கல்வியும் பெற்று யோக ஞானக் கலைகளை உருவாக்கினர்· தமிழர்கள் ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் கற்றுத் தேர்ந்தவர்கள் என்பதைச் சித்தர் நூல்கள் தெளிவுறுத்துகின்றன·

சித்த மருத்துவ நூல்கள் அச்சுப்பதிப்பாக வெளிவரத் தொடங்கிய வரலாறு மற்றும் பதிப்பகங்களின் பங்களிப்புகள் கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| **பதிப்பகம் / அரசு நிறுவனம் (Publisher / Institution)** | **தொடங்கப்பட்ட ஆண்டு (Year)** | **பதிப்பித்த முக்கிய சித்தர் / மருத்துவ நூல்கள் (Published Texts)** |
|---|---|---|
| **பி. இரத்தின நாயக்கர் அண்ட் சன்ஸ்** | 1920 | மூலிகை மர்மம், பதார்த்த குண சிந்தாமணி, சித்தர் பாடல்கள்[8] |
| **தாமரை நூலகம் (எஸ். பி. இராமச்சந்திரன்)** | 20 ஆம் நூற்றாண்டு | பதினெண் சித்தர் சுவடிகள், வாதக்கோவை, நீர் மருத்துவம்[8] |
| **தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம்** | அரசு நிறுவனம் | தட்சணாயனார் வைத்ய அட்டவணை, சுவடிப் பதிப்புகள்[8] |

| | | |
|---|---|---|
| **உ. வே. சாமிநாதையர் நூலகம்** | அரசு நிறுவனம் | வைத்யமலை அகராதி, வாகட அகராதி[8] |
| **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்** | அரசு நிறுவனம் | சித்த மருத்துவ வரலாறு (ஆனைவாரி ஆனந்தன்)[14] |
| **தமிழ் வளர்ச்சிக் கழகம்** | அரசு நிறுவனம் | சித்த மருத்துவ அடிப்படைகள் (ஜி. கணபதி - 7 தொகுதிகள்)[3] |


### 7. சித்தரியல் முறைகளின் விளக்கப் படங்கள் மற்றும் மாதிரி வரைபடங்கள்

சித்த மருத்துவ அறிவியலில் குறிப்பிடப்படும் உடலியல் இயக்கம் மற்றும் நோயறிதல் முறைகளைப் புரிந்துகொள்வதற்கு மாதிரிக் வரைபடக் கட்டமைப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

#### படம் 1: மனித உடலியல் மற்றும் பஞ்சபூதத் தொடர்பு வரைபடம்

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது, சித்த மருத்துவத்தின் படி மனித உடலில் பஞ்சபூதங்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதைக் காட்டும் கட்டமைப்பு விளக்கப்படமாகும்.

| **அண்டப் பூதம் (Universal Element)** | **பிண்டப் பூதம் (Bodily Element)** | **உடலியல் பகுதி (Anatomical Tissue)** | **இயக்க நிலை (Function)** |
|---|---|---|---|
| **ஆகாயம் (Ether)** | இடைவெளி | நரம்பு மண்டலம், குழிப்பகுதிகள் | மனக் கட்டுப்பாடு |
| **காற்று (Air)** | வாதம் (Vatham) | சுவாசம், மூட்டுகள், சுழற்சி | இயக்கம் |
| **தீ (Fire)** | பித்தம் (Pitham) | வயிறு, இரத்தம், கண்கள் | வெப்பம் / செரிமானம் |
| **நீர் (Water)** | கபம் (Kapham) | மூளை, உமிழ்நீர், திரவங்கள் | குளிர்ச்சி / இணைப்பு |
| **நிலம் (Earth)** | உடற்கட்டு | எலும்பு, தசை, தாதுக்கள் | உறுதித் தன்மை |




**படம் 2: சித்த மருத்துவ நோயறிதல் எண்வகைத் தேர்வு (அட்டவிதத் தேர்வு) விளக்கப்படம்**

சித்த மருத்துவத்தில் நோயாளியைப் பரிசோதிக்கச் சித்தர்கள் எட்டு வகையான பரிசோதனை முறைகளை வகுத்துள்ளனர். அவையாவன:

1. **நாடி**: வாத, பித்தம், கப நாடிகளின் ஓட்டத்தைக் கைகாட்டி விரல்களால் கணித்தல்·
2. **ஸ்பரிசம்**: உடலின் வெப்பம் மற்றும் குளிர்ச்சியைத் தொட்டு உணர்தல்[3].
3. **நா**: நாவின் நிறம், சுவை மற்றும் படிவுகளைப் பார்த்தல்[3].
4. **நிறம்**: தோலின் நிற மாற்றத்தைக் கவனித்தல்[3].
5. **மொழி**: நோயாளியின் குரல் ஒலி மற்றும் பேச்சின் தன்மையைக் கேட்டல்[3].
6. **விழி**: கண்களின் நிறம் மற்றும் பாவைகளைக் கணித்தல்[3].
7. **மலம்**: மலத்தின் நிறம், சிக்கல் மற்றும் தன்மையை ஆராய்தல்[3].
8. **மூத்திரம்**: சிறுநீரின் நிறம், மணம் மற்றும் எள்ளெண்ணெய் ஊற்றிப் பார்க்கும் 'நெய்க்கோரி' ஆய்வு[3].

## 8. முடிவுரை

தமிழ் மொழி மெய்ஞ்ஞான மொழியாகத் திகழ்வதற்குத் தமிழ் மெய்யியல் மரபினைக் கட்டமைத்த சித்தர்களின் சிந்தனைகளே காரணமாகும்· உணவியல் மருத்துவ முறைகளாகக் கலந்துள்ள தமிழ் மரபு மருத்துவம் உலகெங்கும் பரவியுள்ளது· இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சித்தரியல் மாநாடுகள் நடத்தப்பெற்று வருகின்றன· தமிழ்ச் சித்தர்கள் சாதி சமயங்களைக் கடந்து உலக உயிர்கள் மீது அன்பு செலுத்தியவர்கள்·

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய வள்ளலார் சன்மார்க்கச் சித்தராக விளங்கி உயிர்க்கருணைய போதித்தார்·

சித்தர்களின் பெயரில் கிடைத்த நூல்கள் மானுட சமுதாயம் பயன்பெறும் வகையில் கல்விப்புலங்களையும் கலைகளையும் அறிவியல் தொழில்நுட்பங்களையும் விவரித்து நிற்கின்றன· ஞானவெட்டியான் போன்ற நூல்கள் ஞானத் தேடலின் ஊற்றுகளாகத் திகழ்கின்றன· உலக அமைதியும் உயிர்களின் இன்புற்ற வாழ்வும் சித்தநெறிக் கோட்பாட்டின் இலக்காகும்· சங்க இலக்கிய இயற்கை வாழ்வியலும், அற இலக்கிய மருத்துவப் பெயர்களும், திருமூலரின் யோக நெறியும் தமிழரின் மரபுசார் அறிவியலை உலகிற்குப் பறைசாற்றுகின்றன·

## 9. ஆசிரியர் சார்பின்மை உரை

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையை ஆக்குவதிலும் தரவுகளைத் தொகுப்பதிலும் எவ்வித நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட நலன்களின் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்பதைத் தெள்ளத்தெளிவாக உறுதிப்படுத்துகிறார்.

## 10. நூலடைவு

[1.] சோமசுந்தரம், மீ.ப. *சித்தர் இலக்கியம்*. முதல் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1988·

[2.] பாக்யமேரி. *வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2008·

[3.] கேசிகன், புலியூர். *புறநானூறு மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், 2010·

[4.] கேசிகன், புலியூர். *நற்றிணை மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், 2010·

[5.] இந்திய மருத்துவம் - ஓமியோபதி துறை. *தமிழ் சித்த மருத்துவக் கோட்பாடு*. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம், 1995·

[6.] ஆனந்தன், ஆனைவாரி. *சித்த மருத்துவ வரலாறு*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2003[14].

[7.] கணபதி, ஜி. *சித்த மருத்துவ அடிப்படைகள்*. தமிழ் வளர்ச்சிக் கழகம், 2013[3].

**Works cited**

1. Siddhars of Tamil Siddha Medicine | PDF | Ayurveda - Scribd, https://www.scribd.com/doc/44582513/Siddhargal
2. Siddha Maruttuvam in Tamil (Set of 7 Volumes) - Exotic India Art, https://www.exoticindiaart.com/book/details/siddha-maruttuvam-in-tamil-set-of-7-volumes-mzw658/
3. பழந்தமிழ் நூல்களில் மருத்துவம் - மருத்துவர் - மருந்துப் பொருட்கள் - அனிச்சம், http://anichchem.blogspot.com/2020/08/blog-post_90.html

4. சங்க இலக்கியங்களில் சித்த மருத்துவம் - நித்திலம், http://coralsri.blogspot.com/2021/11/blog-post_88.html

5. Tamil traditional medicinal system - siddha: an indigenous health practice in the international perspectives - SciSpace, https://scispace.com/pdf/tamil-traditional-medicinal-system-siddha-an-indigenous-4ia6rlv1kf.pdf

6. ஈ.கவிதா /தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை 2(2) 2021,19-25 - REST Publisher, https://restpublisher.com/wp-content/uploads/2024/01/%E0%AE%9A%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B2%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%AE%E0%AE%B0%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B5-%E0%AE%95%E0%AE%B2%E0%AF%88-.pdf

7. Siddha medicine | சித்தர்களின் மூலம், பாரம்பரியம், இன்றைய நிலை, https://tamilsiddhar.wordpress.com/tag/siddha-medicine/

8. சங்க இலக்கியத்தில் பிரதிபலிக்கும் மருத்துவ அறிவு: ஒரு ஆய்வு, https://tamilmanam.in/%E0%AE%9A%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95-%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF/

9. சங்க இலக்கியத்தில் இயற்கை | PDF - Scribd, https://www.scribd.com/presentation/414992513/%E0%AE%9A%E0%AE%99-%E0%AE%95-%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95-%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%A4-%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B2-%E0%AE%87%E0%AE%AF%E0%AE%B1-%E0%AE%95%E0%AF%88

10. Siddha medicine : general - நூல் - Tamil Digital Library, https://tamildigitallibrary.in/Articles/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D-25306-Siddha%20medicine-general

11. Download Tamil Siddha Medicine Books – pdf for Free., https://www.tknsiddha.com/medicine/siddha-books-free/

12. சித்த மருத்துவ நூல்கள் | PDF - Scribd, https://www.scribd.com/document/901896059/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%A4-%E0%AE%A4-%E0%AE%AE%E0%AE%B0%E0%AF%81%E0%AE%A4-%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B5-%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2-%E0%AE%95%E0%AE%B3

13. சித்த மருத்துவ வரலாறு - Politics Books in Tamil - புத்தகங்கள், https://books.dinamalar.com/book/siddamaruththuvavaralaaru-aaniavaarianandan-maruthuvam/9327